**கலைமாணி (பொது) வெளிவாரிப் பட்டப்படிப்புக்கு**
**மாணவர்களை இணைத்துக் கொள்ளல் - 2021 / 2022**

## விண்ணப்பப் படிவத்தை நிரப்புவதற்கான அறிவுறுத்தல்கள்

பின்வரும் அறிவுறுத்தல்களை வாசித்த பின்னர் விண்ணப்ப படிவத்தினை நிரப்பவும்:

### 01. விண்ணப்பத்தை செயற்படுத்துவதற்கான கட்டணம்

விண்ணப்பத்தை செயற்படுத்துவதற்கான கட்டணம் ரூபா 1,500.00 ஆகும். இதனை ஏதாவதொரு மக்கள் வங்கிக் கிளையில் பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படுகின்ற Pay-In- Voucher (PIV) மூலம் செலுத்தி வங்கியினால் மீள் அச்சிடப்பட்ட (Reprint) அதன் பிரதியை நிகழ்நிலை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்தல் வேண்டும்.

### 02. விண்ணப்பிக்கும் முறை

விண்ணப்பத்தினை செயற்படுத்துவதற்கான கட்டணமாக **ரூபா. 1500.00** ஐ செலுத்த வேண்டும். இக்கட்டணத்தினை, பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படுகின்ற பற்றுச் சீட்டினை (Paying-In-Voucher - PIV) பூரணப்படுத்தி எந்தவொரு மக்கள் வங்கிக் கிளையிலும் **கணக்கு இலக்கம் 228-1001-6000-1692 ற்கு** செலுத்த முடியும். விண்ணப்பதாரிகள் பல்கலைக்கழக இணையத்தளத்திலுள்ள விண்ணப்பப்படிவத்தை தரவிறக்கம் செய்வதோடு அதனை பூர்த்தி செய்து **பிரதி பதிவாளர், வெளிவாரி பட்டப்படிப்புக்கள் மற்றும் தொழில்சார் கற்கைகளுக்கான நிலையம், இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக்கழகம், ஒலுவில்** என்ற முகவரிக்கு கிடைக்கக்கூடியதாக அனுப்புதல் வேண்டும். மேலும் விண்ணப்பத்தை அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **“கலைமாணி (பொது) வெளிவாரிப் பட்டப்படிப்பு - 2021 / 2022”** எனக்குறிப்பிட வேண்டும். அத்துடன் இணையத்தளத்திலுள்ள **Google Form** ( https://forms.gle/DLt2afXgHcgRPQLq6 ) னை தவறாது நிரப்புதல் வேண்டும்.

### 03. கட்டண விபரம்

| **கட்டண விபரம்** | **தொகை (Rs.)** |
|---|---|
| விண்ணப்பத்தை செயற்படுத்தல் | 1,500.00 |
| முதலாம் வருடம் | 50,000.00 |
| இரண்டாம் வருடம் | 50,000.00 |
| மூன்றாம் வருடம் | 50,000.00 |
| **மொத்தம்** | **151,500.00** |

(இக்கற்கை நெறிக்கட்டணமானது கருத்தரங்கு, தொடர்மதிப்பீடு, பருவப் பரீட்சை, பதிவுப்புத்தகம் போன்ற அனைத்து வகையான கட்டணங்களையும் உள்ளடக்கியிருக்கின்றது)

04. மொழி

கற்கைநெறியின் முதலாம் வருடம் தமிழ் மொழியிலும் இரண்டாம் மற்றும் மூன்றாம் வருடங்கள் தமிழ் ஆங்கில மொழிகளிலும் நடைபெறும்.

**குறிப்பு** - இப்பாட நெறியில் உள்ளடக்கப்பட்டுள்ள பாடங்கள் பின்வருமாறு 03 தொகுதிகளாக்கப்பட்டுள்ளன. மாணவர்கள் ஒவ்வொரு தொகுதியிலிருந்தும் ஒரு பாடத்தினை கட்டாயம் தெரிவு செய்தல் வேண்டும்.

| முதலாவது தொகுதி | இரண்டாவது தொகுதி | மூன்றாவது தொகுதி |
|---|---|---|
| Sociology | Economics | Hindu Civilization |
| Political Science | English Literature | History |
| Tamil | Statistics | TESL (Teaching English as a Second Language) |
| Geography | GIS | Public Administration ( Students could choose either Political Science or Public Administration, not Both) |
| Philosophy | Information Communication Technology | Education |

மாணவர்கள் ஒவ்வொரு தொகுதியிலுமிருந்து ஒவ்வொரு பாடத்தை விருப்பொழுங்கு அடிப்படையில் தெரிவுசெய்வதோடு மொத்த மாணவர் தொகையில் 25% ஐ விட அதிகமாகாத வகையில் ஒவ்வொரு பாடத்திற்கும் அனுமதிக்கப்படுவர். இதன்போது தெரிவானது நுழைவுப்பரீட்சையின் புள்ளியின் அடிப்படையில் அல்லது தகுந்த பரீட்சையின் மூலம் மேற்கொள்ளப்படும்.

பிரதிப்பதிவாளர்
வெளிவாரிப்பட்டப்படிப்புக்கள் மற்றும் தொழில்சார் கற்கைகள் நிலையம்
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்
பதிவாளருக்காக